NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 July 2015

# ஜூரோங் தீவில் கரை ஒதுங்கிய அரிய வகைத் திமிங்கிலம்



ஜூரோங் தீவில் நேற்றுக் காலை உயிரற்ற நிலையில் கரை ஒதுங்கிய 10 மீட்டர் நீளமுள்ள திமிங்கிலம் ‘ஸ்பெர்ம் வேல்’ என்று அழைக்கப்படுகிறது.

**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

ஜூரோங் தீவில் நேற்றுக் காலையில் திமிங்கிலத்தின் சடலம் ஒன்று மிதந்தவாறு கரை ஒதுங்கியுள்ளது. 10 மீட்டர் நீளமுள்ள இந்தத் திமிங்கிலத்தின் உடல் லீ கொங் சியாங் இயற்கை வரலாற்று அரும்பொருளகத்திற்கு ஆய்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. திமிங்கிலம் இறந்ததற்கான காரணம் தெரியவில்லை. அவ்விலங்கின் துடுப்புறுப்பில் இரத்தம் வெளியானதாகக் கூறப்படுகிறது.

இறந்து கிடந்த அந்தத் திமிங்கிலம் ஸ்பெர்ம் வகையைச் சேர்ந்தது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

20 மீட்டர் நீளம் வரை வளரக் கூடிய இந்தத் திமிங்கிலம் உலகின் எல்லாக் கடல்களிலும் காணப்படும் அரிய வகை திமிங்கிலம். பூமியிலுள்ள உயிரினங்களில் மிகப் பெரிய அளவிலான மூளையைக் கொண்டுள்ள அற்புதமான படைப்பு இந்த ஸ்பெர்ம் திமிங்கலம். இதன் தலையில் உருவாவது ஒரு வகை எண்ணெய் என்று அறியப் பட்டாலும் அது எவ்வாறு உருவாகிறது என்பது விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிராக உள்ளது எனக் கூறப்படுகிறது. திமிங்கிலங்களில் இவ்வகைத் திமிங்கிலங்கள் தான் அதிக நீளமான பல் வரிசையைக் கொண்டவை. சிங்கப்பூர்க் கடற்கரைகளில் திமிங்கிலம் ஒன்று ஒதுங்குவது இதுவே முதல்முறை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.